ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2287/25 - 2022 ජූලි මස 07 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.07.07

*2287/25 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### புகையிரத கட்டளைச் சட்டம்

*புகையிரத கட்டளைச் சட்டத்தின் (200 ஆம் அத்தியாயத்தின்) 03 மற்றும் 04ஏ ஆகிய பிரிவுகளினால் தமக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள தத்துவங்களின் கீழ் நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டுடன் போக்குவரத்து அமைச்சரினால் விதிக்கப்பட்டுள்ள சட்டம்.*

கலாநிதி **பந்துல குணவர்தன,**
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு,
*2022, யூன் 21.*

### சட்டம்

*1926 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 26 ஆந் திகதிய 7514 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிற்சேர்க்கையில் பிரசுரிக்கப்பட்டதும் காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டதுமான பயணிகள் போக்குவரத்து, சரக்குகள் போக்குவரத்துக் கட்டணங்களும் மற்றும் பொருட்கள் வகைப்படுத்தல் தொடர்பான ஒழுங்குவிதிகள் , 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருமாறு தொடர்ந்தும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:*

*“பயணிகள் எனும் தலைப்பின் கீழ்”*
*17 ஆவது ஒழுங்குவிதி - கட்டணங்கள்.*

1A - G 37046 — 81 (2022/07)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

உப பந்தி -

(ஏ) - ஒவ்வொரு புகையிரத நிலையத்திலிருந்தும், உப புகையிரத நிலையத்திலிருந்தும், புகையிரத தரிப்பிடத்திலிருந்தும் பிற புகையிரத நிலையமொன்று, உப புகையிரத நிலையமொன்று அல்லது புகையிரத தரிப்பிடமொன்று வரையிலான கட்டணம், குறிப்பிடப்பட்டுள்ள வலய அட்டவணைக்கு அமைய பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

| *எந்தவொரு ஆரம்ப புகையிரத நிலையத்திலிருந்து/ உப புகையிரத நிலையத்திலிருந்து* | *1 கி. மீ. இற்கு பயணக் கட்டணம் ரூபா* | | |
|---|---|---|---|
| | *I ஆம் வகுப்பு* | *II ஆம் வகுப்பு* | *III ஆம் வகுப்பு* |
| வலயம் 1 0கி. மீ. இலிருந்து 10 கி. மீ. வரை | 10.40 | 5.20 | 2.60 |
| வலயம் 2 1 0 + கி. மீ. இலிருந்து 50 கி. மீ. வரை | 9.60 | 4.80 | 2.40 |
| வலயம் 3 50 + கி. மீ. இலிருந்து 100 கி. மீ. வரை | 6.80 | 3.40 | 1.70 |
| வலயம் 4 100 + கி. மீ. இலிருந்து 200 கி. மீ. வரை | 5.60 | 2.80 | 1.40 |
| வலயம் 5 200 கி. மீ. இற்கு மேற்பட்ட | 4.40 | 2.20 | 1.10 |
| ஆகக் குறைந்த கட்டணம் | 100.00 | 50.00 | 20.00 |
| வரையறைக்கு மேல் ரூபா - | 50.00 | 50.00 | 20.00 |

(பீ) - புகையிரத மேடை அனுமதிக் கட்டணம் 20.00 ரூபாவாகும்.

**சரக்குகளை ஏற்றிச் செல்லல்**

***ஒழுங்குவிதி 10(ஏ) (i)***

பெற்றோலிய உற்பத்திகளை போக்குவரத்துச் செய்தல்
தற்போதைய கட்டணங்களை நீக்கி பின்வரும் கட்டணங்களை பதிலீடு செய்க.

| | *1000 லீற்றரை 01 கி. மீ. தூரம் கொண்டு செல்வதற்கு* | |
|---|---|---|
| | *இரம்புக்கனையில் இருந்து கீழ்நோக்கி ரூ. ச.* | *இரம்புக்கனையில் இருந்து மேல்நோக்கி ரூ. ச.* |
| 1 விமானங்களுக்கான எரிபொருள் | 17.40 | - |
| 2 கசெலின் /மண்ணெண்ணெய்/பெற்றோல்/டீசல் / எரிவாயு எண்ணெய்/கறுப்பு எண்ணெய்/அடுப்பிற்கான எண்ணெய் | 14.60 | 17.40 |

***ஒழுங்குவிதி 10 (ஏ) - (ii)***

நானாவித புகையிரத நிலையங்களுக்காகவும் இக் கட்டண அட்டவணையைப் பயன்படுத்தி கட்டணங்களை கணிப்பீடு செய்கையில் ஒவ்வொரு எரிபொருள் தாங்கிக்கும் கிடைக்கும் போக்குவரத்துக் கட்டணம் கிட்டியதும் அதிகூடியதுமான ரூபா 1,000.00 இற்கு எல்லைக்குட்டுப்படுத்தல் வேண்டும்.

***ஒழுங்குவிதி 10*** - கட்டண முறையை எளிதாக மேற்கொள்வதற்காக ஷன்ரிங் கட்டணங்களையும், வெற்று போக்குவரத்துக் கட்டணங்களையும் உள்ளடக்கிய 1 மற்றும் 2 ஆம் வகுப்புகளுக்காக புதிய கட்டணங்களையும், நிபந்தனைகளையும் பதிலீடு செய்க.

***ஒழுங்குவிதி 10 (ஏ) - (i)***

சரக்குகளை ஏற்றும்/பொறுப்பேற்கும் நிலையங்களில் ஷன்ரிங் மற்றும் உரிய இடத்தில் வைத்திருத்தல் போன்ற அமைய கட்டணங்களும் வெற்று போக்குவரத்துக் கட்டணங்களும் உள்ளடங்கலாக கீழ்க் காட்டப்பட்ட புதிய கட்டணங்கள் அறவிடப்படுதல் வேண்டும்.

*தற்போதைய கட்டணங்களை நீக்கி உத்தேச கட்டணங்களை பதிலீடு செய்க.*

| | *மெ. தொன்/கிலோமீற்றருக்கு* | |
|---|---|---|
| | *இரம்புக்கனையில் இருந்து கீழ்நோக்கி ரூ. ச.* | *இரம்புக்கனையில் இருந்து மேல்நோக்கி ரூ. ச.* |
| *1 ஆம் வகுப்பு* | *9.00* | *13.00* |
| *2 ஆம் வகுப்பு* | *11.00* | *14.50* |

***ஒழுங்குவிதி 10 (ஏ) - (i)***

*நானாவித புகையிரத நிலையங்களுக்காகவும் இக் கட்டண அட்டவணையைத் தயாரிக்கும் பொருட்டு கட்டணங்களை கணிப்பீடு செய்கையில் கிடைக்கும் கட்டணம் , அடுத்த முழுமையானதும் அதிகூடியதுமான நூறு ரூபாவிற்கு வருமாறு தயாரிக்கப்படுதல் வேண்டும்.*

***ஒழுங்குவிதி 11*** *- ஆகக்குறைந்த மற்றும் பகுதிகளுக்கு கட்டணங்களை அறவிடுதல்.*

*11(ஏ) - சரக்குகள் போக்குவரத்திற்காக கட்டணங்களை கணிப்பீடு செய்யும் போது ஆகக் குறைந்த தூரம் 100 கி.மீ. ஆக இருக்கும்.*

*11(பீ) - வெகனுக்கான ஆகக்குறைந்த கட்டணங்களை கணிப்பீடு செய்தல்.*

*11 (பீ) (i) - சரக்குகளை ஏற்றும் கொள்ளளவு 13.20 மெ. தொன்னுக்கு மேற்படாத நான்கு சக்கர வெகனுக்காக ரூ. 3,000.00*

*11 (பீ) (ii) - சரக்குகளை ஏற்றும் கொள்ளளவு 13.20 மெ. தொன்னுக்கு மேற்படாத நான்கு சக்கர வெகனுக்காக ரூ. 4,000.00*

*11 (பீ) (iii) - சரக்குகளை ஏற்றும் கொள்ளளவு 13.20 மெ. தொன்னுக்கு மேற்படாத நான்கு சக்கர வெகனுக்காக ரூ. 5,000.00*

*11 (பீ) (iv) - சரக்குகளை ஏற்றும் கொள்ளளவு 13.20 மெ. தொன்னுக்கு மேற்படாத நான்கு சக்கர வெகனுக்காக ரூ. 6,000.00*

***ஒழுங்குவிதி 11 (சீ)***

i. *சரக்குகளை ஏற்றும் கொள்ளளவு 13.20 மெ. தொன்னுக்கு மேற்படாத நான்கு சக்கர வெகனுக்கான ஆகக்குறைந்த நிறை மெ. தொன் 10,*

ii. *சரக்குகளை ஏற்றும் கொள்ளளவு 26.40 மெ. தொன்னுக்கு மேற்படாத எட்டு சக்கர வெகனுக்கான ஆகக்குறைந்த நிறை மெ. தொன் 20,*

iii. *சரக்குகளை ஏற்றும் கொள்ளளவு 26.40 மெ. தொன்னுக்கு மேற்பட்ட எனினும், 39.60 மெ. தொன்னுக்கு மேற்படாத எட்டு சக்கர வெகனுக்கான மெ. தொன் 25,*

iv. *சரக்குகளை ஏற்றும் கொள்ளளவு 39.60 மெ. தொன்னுக்கு மேற்பட்ட எட்டு சக்கர வெகனுக்கான ஆகக்குறைந்த நிறை மெ. தொன் 35,*

***ஒழுங்குவிதி 23*** *- வெகனுக்கான தாமதக் கட்டணங்கள்*

***ஒழுங்குவிதி 23 (ஏ)***

*ஒவ்வொரு புகையிரத நிலையத்திற்கும் வெகன்கள் வழங்கப்பட்டு 8 மணித்தியாலங்களுக்குள் அவற்றிற்கு சரக்குகளை ஏற்றி முடித்தல் வேண்டும். வெகன் அனுப்பாணையாளர் உரிய காலத்திற்குள் அவற்றிற்கு சரக்குகளை ஏற்றுவதற்குத் தவறும் அல்லது, சரக்குகளை ஏற்றியும் உரிய பத்திரங்களை சமர்ப்பிபதற்குத் தவறும் சரக்குகளை அனுப்புபவர், குறித்த தாமதங்களுக்காக தாமதக் கட்டணத்தை செலுத்துவதற்கு கட்டுப்படுதல் வேண்டும். அத்தோடு, வேலை செய்யும் மணித்தியாலமொன்றுக்கு அல்லது அதன் பகுதியொன்றுக்கு நான்கு சக்கர அல்லது எட்டு சக்கர வெகனுக்காக ரூ. 2,500.00 வீதம் செலுத்துதல் வேண்டும்.*

**ஒழுங்குவிதி 13 (ஏ) - தபால் போக்குவரத்து**

| | *இரம்புக்கனையில் இருந்து கீழ்நோக்கி கிலோ மீற்றர் ஒன்றுக்கு ரூபா* | *இரம்புக்கனையில் இருந்து மேல்நோக்கி கிலோ மீற்றர் ஒன்றுக்கு ரூபா* |
|---|---|---|
| நடமாடும் தபால் ரெயில் பெட்டி | 175.00 | 225.00 |
| இடைநிறுத்த ரெயில் பெட்டியின் அரைப்பகுதி | 110.00 | 200.00 |
| கட்டுப்பாட்டாளர் பொறுப்பிலுள்ள தபால்கள் | 100.00 | 125.00 |
| தபால் போக்குவரத்துக்கான மூடப்பட்ட வெகன் | 125.00 | 200.00 |
| நான்கு சக்கர வெகன் | 100.00 | 150.00 |

**குறிப்பு** - 11 ஆம் ஒழுங்குவிதியில் காட்டப்பட்டுள்ள ஆகக்குறைந்த கட்டணங்கள் தபால் போக்குவரத்து வெகன்களுக்கும் ஏற்புடையதாகும்.

EOG 07 - 0031

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.